தல் வேண்டும். எனவே எத்தகைய வெளியீட்டு மதிப்பீட்டுக் குறிப்புகளிலும் பொதுவாக மூன்று கருத்துகள் உருவாதல் வேண்டும்.

- பிரச்சனைக்குரிய சூழ்நிலையுடன் / கற்றல் பொருளுடன் தொடர்புடைய முக்கிய கருத்துகள் விளக்கப்பட்டுள்ளன.
- கருத்துகளைத் தகுந்த முறையில் வெளிப்படுத்திட பொருத்தமான மொழி பயன்படுத் தப்பட்டுள்ளது.
- வெளியீட்டு வடிவங்களின் அமைப்பும் தன்மையும் கடை பிடிக்கப்பட்டுள்ளது.

இவற்றிலிருந்து வெளியீட்டு வடிவத்திற்கு ஏற்ப குறிப்புகள் உரு வாக்கப்பட வேண்டும்.

(எ.டு.) : மனு

- சூழ்நிலை / பிரச்சனையுடன் தொடர்புள்ள முக்கிய கருத்து கள் உண்டு.
- கருத்துகளின் பாவனை / உணர்ச்சி வெளிப்பாட்டிற்குப் பொருத்தமான மொழி (அமைப்பு, சிறப்பான பயன்படுத்தல் கள், மொழிநடை என்பனவற்றின் பயன்பாடு) பயன்படுத்தப் பட்டுள்ளன.
- கடிதத்தின் அமைப்பு பின்பற்றப்பட்டுள்ளது. யார், யாருக்கு, எங்கிருந்து, முடிவுரை, பெயரும் கையொப்பமும் போன்றவை.

ஆனால் செயல்பாட்டு, பிரச்சினை என்பனவற்றின்படி பொதுவான இக்குறிப்பை விளக்கிப் பொருத்தமுடையதாக்கிப் பயன்படுத்த வேண்டும். மாவட்ட ஆட்சியாளருக்கு அனுப்புகின்ற மனுவின் சிறப்புக் குறிப்புகள் பொதுக்குறிப்பை அடிப்படையாக கொண்டு தயாராக்கியதைச் சோதித்துப் பார்ப்போம்.

1. பொருத்தமான சொற்கள், நடைகள் என்பவை கலந்த மொழி பயன்படுத்தப்பட்டுள்ளன.



2. கருத்தைப் புரிந்துகொள்ள தடையில்லாத முறையில் எழுதப்பட்டுள்ளன.

3. இடம், நாள், இன்னாருக்கென்று சொல்லி எழுதுகிற நிலை, பெயர், கையொப்பம் போன்றவை பின்பற்றப்பட்டுள்ளன.

குறிப்புகளை விளக்கி எழுதுவது மாணவனின் கற்றல் தன்மையையும் இடத்தையும் மிகச் சரியாகப் புரிந்துகொள்ள உதவும்.














## மொழி வெளியீட்டு வடிவங்களும் குறிப்புகளும்

உயர்தொடக்கப்பள்ளி மாணவர்கள் ஒவ்வொரு வெளியீட்டு வடிவத்தோடும் தொடர்பு கொண்டு பெற வேண்டிய நிலையே குறிப்புகளைக் கண்டறிவதற்கு அடிப்படையாக அமைந்தது. பிரச்சனையுடன் தொடர்புடைய கருத்துகளிலுள்ள மேன்மை, மொழியைப் பயன்படுத்துவதிலுள்ள மேன்மை, வெளியீட்டு வடிவங்களின் சிறப்பியல்புகளைப் பின் பற்றுவதிலுள்ள மேன்மை என்பனவற்றைக் கருத்தில் கொண்டே குறிப்புகள் உருவாக் கப்பட்டுள்ளன. முற்பகுதியில் தரப்பட்ட எடுத்துக்காட்டில் - கருத்திற்கொண்ட முறை யில் - ஒவ்வொரு செயல்பாட்டின் சிறப்பியல்புகளைக் கவனத்திற்கொண்டு அந்தந்த நேரங்களில் இப்பொதுக் குறிப்புகளை விளக்கிச் சிறப்பிக்க வேண்டும்.

1. **குறிப்பு**
   - பிரச்சினையுடன் தொடர்புடைய கருத்து தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.
   - பிரச்சினையுடன் தொடர்புடைய கருத்தை வெளியிடுவதற்கேற்ற முறையில் மொழி (வடிவமைப்பு, சிறப்பு வாய்ந்த பயன்படுத்தல்கள், மொழிநடை என்பவற்றின் பயன்பாடு) பயன்படுத்தப்பட்டுள்ளது.
   - முழுமையாகச் சொல்லப்பட்டுள்ளன.

2. **அனுபவக்குறிப்பு / நினைவுக்குறிப்பு / நாட்குறிப்பு**
   - பிரச்சினையுடன் தொடர்புடைய கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளன.
   - வாசகரிடையே உணர்வூட்டும் வகையில் அனுபவங்கள் தேர்வு செய்து வெளி யிடப்பட்டுள்ளன.
   - கருத்துகளின் பாவனை நெஞ்சைத் தொடும் வகையில் வெளியிட உதவும் மொழி (வடிவமைப்பு, சிறப்பு வாய்ந்த பயன்படுத்தல்கள், மொழிநடை என்பனவற்றின் பயன்பாடு) பயன்படுத்தப்பட்டுள்ளது.
   - அனுபவத்தின் ஆற்றல் சற்றும் குறையாமல் சுருக்கி வெளியிடப்பட்டுள்ளது.

3. **உற்றுநோக்கல் குறிப்பு**

- பிரச்சினையுடன் தொடர்புடைய கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளன.
- உற்றுநோக்கிய தகவல்கள் வலுவாகவும் கவர்ச்சியாகவும் வெளிப்படுத்திட உதவும் மொழி (அமைப்பு, சிறப்பான பயன்பாடுகள், மொழிநடை என்பனவற்றின் பயன்பாடு) பயன்படுத்தப்பட்டுள்ளது.
- உற்றுநோக்கிக் கண்டறிந்த காரியங்கள் பொருத்தமுறத் தரப்பட்டுள்ளன.
- கருத்துகள் விடுபடாமல் சுருக்கி வெளியிடப்பட்டுள்ளன.

4. **கலந்துரையாடல் குறிப்பு**

- கலந்துரையாடலுக்கு இடமளித்து வெளியிடப்பட்ட முக்கியக் கருத்துகள் முழுவதும் கூறப்பட்டுள்ளன.
- மொழி தொடர்பான மேன்மை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (அமைப்பு, சிறப்பான பயன்படுத்தல்கள், மொழிநடை என்பனவற்றின் பயன்பாடு)
- கலந்துரையாடலின் அடிப்படையில் உருவான முடிவுகளுடன் தன்னுடைய உற்றுநோக்கலும் சேர்த்து ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.
- கருத்து விடுபடாமல் சுருக்கிச் சொல்லப்பட்டுள்ளது.

5. **கருத்துரைகள் / கருத்துக்குறிப்பு**

- பிரச்சினையின் பல்வேறு பக்கங்களை மிகச் சிறப்பாக அலசி ஆராய்ந்து கருத்துரை தயார் செய்யப்பட்டுள்ளது.
- கருத்துரை வலுவாகவும் வாசகரைக் கவரும் வகையிலும் வெளியிடுவதற்கேற்ற மொழி (அமைப்பு, சிறப்பான பயன்படுத்தல்கள், மொழிநடை என்பனவற்றின் பயன்பாடு) பயன்படுத்தப்பட்டுள்ளது.
- பிரச்சினையைப் பற்றிய தன்னுடைய நிலைபாட்டை எடுத்துக்காட்டுகளுடன் உத்தியோடு விளக்கப்பட்டுள்ளது.

- முழுமையாகச் சொல்லப்பட்டுள்ளது.

6. **வாசிப்புக் குறிப்பு**
   - வாசித்த பகுதியில் வெளிப்படுத்தப்பட்டுள்ள முக்கிய கருத்துகள் / பிரச்சினைகள் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளன.
   - வாசிப்பு அனுபவம் மனங்கவரும் வகையில் வெளியிட உதவுகின்ற மொழி (அமைப்பு, சிறப்பான பயன்படுத்தல்கள்) மொழிநடை என்பனவற்றின் பயன்பாடு பயன்படுத்தப்பட்டுள்ளது.
   - வாசிப்பிலிருந்து கிடைத்த அனுபவங்கள் (உணர்வுகள்) நிலைப்பாடு, கருத்துகள்...) சொல்லப்பட்டுள்ளன.
   - உற்றுநோக்கலும் கண்டறிதலும் சொந்த கருத்தும் சுருக்கிச் சொல்லப்பட்டுள்ளன.

7. **விளக்கக் குறிப்பு**
   - பிரச்சனையை/ பிரச்சனைச் சூழலை / நிலைப்பாடு விளக்கத் தேவையான கருத்துகள் முழுவதும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.
   - விளக்கம் வலுவாகவும் மனங்கவரும் வகையிலும் வெளியிடுவதற்கேற்ற மொழி (அமைப்பு, சிறப்பான பயன்டுத்தல்கள், மொழிநடை என்பனவற்றின் பயன்பாடு) பயன்படுத்தப்பட்டுள்ளது.
   - கருத்து சுருக்கித் தரப்பட்டுள்ளது.

8. **ஒப்பீட்டுக் குறிப்பு**
   - ஒப்பீட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பிரச்சினை / நிகழ்வு / உற்று நோக்கல்கள்/ நிலைபாடுகள் / கதாபாத்திரம் என்பனவற்றை விளக்கத்தேவையான கருத்துகள் இயன்றளவு கண்டறியப்பட்டுள்ளன.
   - ஒப்பீடு செய்து முடிவுகளை வலுவாக வெளிப்படுத்துவதற்கேற்ற மொழி (அமைப்பு, சிறப்பான பயன்படுத்தல்கள், மொழிநடை என்பனவற்றின் பயன்பாடு) பயன்படுத்தப்பட்டுள்ளன.
   - சொந்தமாகச் செய்த உற்றுநோக்கல்களும் நிலைப்பாடுகளும் எடுத்துக்காட்டுளும் உத்திகளும் விளக்கப்பட்டுள்ளன.
   - கருத்து சுருக்கிச் சொல்லப்பட்டுள்ளது.

9. **விமர்சனக்குறிப்பு / அலசி ஆராய்தல் குறிப்பு / புத்தக விமர்சனம்**

- பிரச்சனையை / சூழலை அலசி ஆராய்ந்து முக்கிய கருத்துகள் கண்டறியப் பட்டுள்ளன.
- விமர்சனம் / அலசி ஆராய்தல் / திறனாய்வு வலுவாக வெளியிடுவதற்கேற்ற மொழி (அமைப்பு, சிறப்பான பயன்படுத்தல்கள், மொழிநடை என்பனவற்றின் பயன்பாடு) பயன்படுத்தப்பட்டுள்ளது.
- சொந்தமாகச் செய்த உற்றுநோக்கல்களும் நிலைப்பாடுகளும் ஆதாரங்கள் / சான்றுகள் சேர்த்து விளக்கப் பட்டுள்ளன.
- கருத்து சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

10. **கதாபாத்திரத் திறனாய்வு**

- பிரச்சினை / கருத்துகளுடன் தொடர்புபடுத்தி கதாபாத்திரத்தை அலசி ஆராய்ந்து கண்டறிதல்கள் நடத் தப்பட்டுள்ளன.
- சொந்தமாகக் கண்டறிந்தவைகளையும் கருத்துகளையும் வலுவாகவும் மனம் கவரும் வகையிலும் வெளிப் படுத்துவதற்கேற்ற மொழி (அமைப்பு, சிறப்பான பயன்படுத்தல்கள், மொழிநடை என்பனவற்றின் பயன் பாடு) பயன்படுத்தப்பட்டுள்ளது.
- கதாபாத்திரத்தின் ஆற்றலும் இயலாமைகளும், வாழ்க்கைக் கண்ணோட்டத்தன்மை, பரிமாற்றம் போன்ற எடுத்துக்காட்டுகளும் விளக்கங்களும் பயன்படுத்தி அலசி ஆராயப்பட்டுள்ளன.
- கதாபாத்திரத்தின் சமகால சமூக மேன்மை உத்திபூர்வமாகக் கண்டறிந்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

11. **நேர்காணல் வினாநிரல்**

- பிரச்சினையுடன் தொடர்புபடுத்தி இயன்றளவு கருத்துகளை நேர்காணலிலிருந்து பெறத்தக்க வகையில் முக்கியத்துவம் வாய்ந்த வினாக்கள் தரப்பட்டுள்ளன.
- நேர்காணலுக்கு ஆளாகும் நபரை நன்முறையில் பதிலளிக்க ஏற்ற மொழி (அமைப்பு, சிறப்பான பயன்ப டுத்தல்கள், மொழிநடை என்பனவற்றின் பயன்பாடு) பயன்படுத்தப்பட்டுள்ளது.
- பிரச்சினையைப் பற்றி ஆழமாகவும் பரவலாகவும் உள்ள தகவல்களைப் பெறத்தகுந்த நிலையில் வெவ் வேறு வினாக்கள் உட்படுத்தப்பட்டுள்ளன.

12. **நாடகம்**

- பிரச்சினையை வாசகரிடம் தீவிரமாகக் கொண்டு சேர்க்க பொருத்தமான கருத்துகளும் மையக் கருத்தும் உண்டு.
- கருத்து, மையக்கருத்து ஆகியவற்றின் வெளிப்பாடு உணர்ச்சிமயமாகவும் நாடகத்தன்மையோடும் நடத்திட ஏற்ற மொழி (அமைப்பு, சிறப்பான பயன்படுத்தல்கள், மொழிநடை என்பனவற்றின் பயன்பாடு) பயன்படுத்தப்பட்டுள்ளது.
- நாடக வடிவத்தின் சிறப்பியல்புகள் (கதாபாத்திரங்கள், உரையாடல், பின்னணி விளக்கம், பல்வேறு பாவனைகள்) பின்பற்றப்பட்டுள்ளன.

13. **கடிதம்**

- சூழல் / பிரச்சினையுடன் தொடர்புடைய முக்கியமான கருத்துகள் உள்ளன.
- கருத்துகளின் பாவனை / உணர்ச்சிகளைச் சுட்டுவதற்கு ஏற்ற மொழி (அமைப்பு, சிறப்பான பயன்படுத்தல்கள், மொழிநடை என்பனவற்றின் பயன்பாடு) பயன்படுத்தப்பட்டுள்ளது.
- கடிதத்தின் அமைப்பு பின்பற்றப்பட்டுள்ளது (யார்? யாருக்கு? எங்கிருந்து? முடிவுரை, பெயரும் கையொப்பம் போன்றவை...)

14. **பத்திரிகைச் செய்தி / செய்திகள்**

- நிகழ்வு / பிரச்சனைக்குத் தேவையான விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன.
- செய்தியில் வாசகரின் உள்ளத்தைத் தொடும் வண்ணம் கவர்ச்சியும் பொருத்தமான மொழியும் (அமைப்பு, சிறப்பான பயன்படுத்தல்கள், மொழிநடை என்பனவற்றின் பயன்பாடு) பயன்படுத்தப்பட்டுள்ளது.
- உள்ளடக்கத்தின் சுருக்கம் குறிப்பிடுவதும் வாசிக்கத் தூண்டுவதும் மனங்கவருவதுமான தலைப்பு தரப்பட்டுள்ளது.
- செய்தியின் மையமான பகுதிகளில் தொடங்கி விளக்கத்திற்குச் செல்லும் முக்கிய வரிசையமைப்பு பின்பற்றப்பட்டுள்ளது.

15. **அறிக்கை**

- பிரச்சினை / சூழல் வாசகரைச் சென்றடையத் தேவையான எல்லாக் கருத்து களும் உட்படுத்தப்பட்டுள்ளன.
- அறிக்கை விவரங்கள் சரியாகவும் அழுத்தமாகவும் வாசகரைச் சென்றடையத் தேவையான மொழி (அமைப்பு, சிறப்பு வாக்கியங்கள் நடை இவற்றின் பயன் பாடு) பயன்படுத்தப்பட்டுள்ளது.
- அறிக்கையின் அமைப்பு (தலைப்பு, அழைப்புச் சொல் (Addressing words) உள்ளடக்க விளக்கம் அறிவிப்பாளர் பெயர், வேண்டுதல், இடம், தேதி) சரியாகப் பின்பற்றப்பட்டுள்ளது.
- அறிக்கை ஆர்வத்துடனும் எளிமையுடனும் வாசிப்பதற்குத் தூண்டும் விதம் சுருக் கமாகவும் கவர்ச்சியாகவும் கூறப்பட்டுள்ளது.



16. **சுவரொட்டி**

- சூழல்/ பிரச்சினை தொடர்பாக முக்கிய கருத்துகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.
- கருத்துகளை முறையாகவும் வலுவாகவும் எடுத்துரைக்கும் மொழிநடை (அமைப்பு, சிறப்பு வாக்கியங்கள், நடை இவற்றின் பயன்பாடு) கடைபிடிக்கப்பட் டுள்ளது.
- சுவரொட்டி அமைப்பு (தலைப்பு, உள்ளடக்க விளக்கங்கள், அறிவிப்பவர், வேண் டுதல்...) கையாளப்பட்டுள்ளது.
- சுவரொட்டி ஆர்வத்துடனும் எளிமயாகவும் வாசிக்கத் தூண்டும் விதம் சுருக்க மாகவும் கவர்ச்சியாகவும் எழுதப்பட்டுள்ளது.

17. **முத்திரை வாக்கியம்**

- பிரச்சனை/ சூழல் கேட்பவர்களைச் சென்றடையத் தேவையான கருத்துகள் உள்ளன.
- பிரச்சனை/ சூழல் பற்றிய கருத்துகள் கேட்போரை ஈர்க்கும் வகையில் எடுத்து ரைக்கப் பொருத்தமான மொழி (அமைப்பு, சிறப்பு வாக்கியங்கள், நடை இவற் றின் பயன்பாடு) பின்பற்றப்பட்டுள்ளது.

- கேட்போரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் சுருக்கமாகவும் வலுவாகவும் எடுத்துரைக்கும் வாக்கியங்கள், திரும்பத் திரும்ப வரும் சொற்களின் சேர்க்கை, ஆகியவை உண்டு.

18. **கேலிச்சித்திரம்**
- சூழல் / பிரச்சனை தொடர்பான முக்கிய கருத்துகள் கூறப்பட்டுள்ளன.
- கருத்துகளை வலிமையாக எடுத்துரைப்பதற்குப் பொருத்தமான வடிவமும் மொழியும் (கோட்டு ஓவியம் Caricature) படங்கள், பயன்படுத்துதல், வாக்கியங்கள், வரிகள், உரையாடல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- கவர்ச்சியான வெளியீடு (படத்தின் அளவு ஒழுங்கு அமைப்பு) பின்பற்றப்பட்டுள்ளது.

19. **கதை**
- பிரச்சனை தொடர்பான நிலைபாடுகளும் கருத்துகளும் வலுவாகப் பின்பற்றப் பட்டுள்ளன.
- கவர்ச்சியாகவும், கதைகூறும் முறை ஆர்வத்தை தூண்டு வகையிலும் விளக்கப் பட்டுள்ளது.
- பாத்திரப்படைப்பு, கதைக்கரு ஆகியவை கற்பனைத் திறனோடு படைக்கப்பட்டுள்ளன.
- பொருத்தமான தலைப்பு அளிக்கப்பட்டுள்ளது.

20. **கவிதை**
- பிரச்சினை / சூழல் தொடர்பான கருத்துகள் வலுவாகப் பிரதிபலித்துள்ளன.
- மன எண்ணங்களும் கருத்துகளும் வாசிப்போரின் மனதைத் தொடும் வகையில் வெளிப்படுத்தவும், இறுதிவரையிலும் ஆர்வத்தை நிலைபெறச் செய்யவும் உதவுகின்ற மொழி (அமைப்பு சிறப்பான பயன்பாடுகள், நடை இவற்றின் பயன்பாடு) பின்பற்றப்பட்டுள்ளது.

- கதைப்பொருளும், பாத்திர படைப்பும் கற்பனையுடன் மனம் கவரும் வகையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
- கவிதையைப் பலமுறை வாசிக்கத்தூண்டும் வகையிலான வருணனை, உவமை அணி நயங்கள், ஓசை நயம் (எதுகை மோனை) போன்றவை பின்பற்றப்பட்டுள் ளன.

21. **கட்டுரை / உரை**

- பிரச்சினை/ சூழல் தொடர்பான பெரும்பான்மை கருத்துகளும் வந்துள்ளன.
- கருத்துகளும் எண்ணங்களும் வலுவாக வாசகரைச் சென்றடையும்படியான பொருத்தமான மொழி (அமைப்பு, சிறந்த பயன்பாடுகள், நடை ஆகியவற்றின் பயன்பாடு) பின்பற்றப்பட்டுள்ளது.
- கட்டுரையின்/ உரையின் அமைப்பு பின்பற்றப்பட்டுள்ளது (முகவுரை, முக்கிய கருத்துகள், விளக்கங்கள், முடிவுரை).
- பிரச்சினை தொடர்பான தனது ஆய்வுகளும் நிலைபாடுகளும் உத்தியும், உதார ணங்களும் விளக்கப்பட்டுள்ளன.



22. **விளக்கம்**

- சூழல்/ பிரச்சனை தொடர்பான பெரும்பான்மைக் கருத்துகளும் வந்துள்ளன.
- வாசகருக்குச் சூழல்/ பிரச்சனை பற்றி நேரடி அனுபவம் கிடைக்கும் வகையில் வெளிப்படுத்துவதற்கு ஏற்ற மொழி (அமைப்பு, சிறந்த பயன்பாடுகள், நடை, இவற்றின் பயன்பாடு) பின்பற்றப்பட்டுள்ளது.
- சூழல்/ பிரச்சனை பற்றிய விளக்கம் வாசகரின் மனதில் பதியும் வகையில் சொல் ஓவியங்கள், உவமைநயம், ஒப்புமைப் படுத்தல்கள், எடுத்துக்காட்டுகள் போன்றவற்றைப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ளது.

23. **வருணனை**

- பிரச்சினை/ சூழல் தொடர்பான பெரும்பான்மையான கருத்துகள் உட்படுத்தப் பட்டுள்ளன.

- பிரச்சனை/ சூழல் தொடர்பான விளக்கங்கள் வாசிப்பவர்களின் கண் முன் காணும் காட்சியாக வெளிப்படுத்தும் மொழி (அமைப்பு, சிறந்த வாக்கியங்கள், நடை இவற்றின் பயன்பாடு) கையாளப்பட்டுள்ளது.
- வருணனைப் பொருள், பல்வேறு உவமைகள், மிகைப்படுத்திக் கூறுதல், எடுத்துக்காட்டுடன் கூறுதல் இவற்றின் வாயிலாகக் கற்பனை கலந்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

24. **ரசனைக் குறிப்பு**
- வாசித்த பகுதியிலுள்ள பிரச்சினையுடன் தொடர்பான கருத்துகளை உள்வாங்கி வெளியிடப்பட்டுள்ளது.
- வாசித்த பகுதியை பற்றிய ஈடுபாடும் ஆர்வமும் உருவாகும் விதத்தில் வெளியிடுவதற்கு ஏற்ற மொழிநடை, (அமைப்பு, சிறந்த வாக்கியங்கள், நடை இவற்றின் பயன்பாடு) சுயமாகக் கண்டறிந்தவற்றை உதாகரணங்களும் விளக்கங்களும் சேர்த்து வெளியிடப்பட்டுள்ளது.
- வாசித்த பகுதியின் அழகியல் கூறு, கருத்துகளின் இன்றைய முக்கியத்துவம் இவற்றைக் கண்டுபிடித்துக் காரண காரியத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

25. **வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு / தன் வரலாறு / அனுபவக் குறிப்பு**
- தனிநபரின் வாழ்க்கையிலுள்ள முக்கிய நிகழ்வுகள் சூழல்கள், அனுபவங்கள் இவை விளக்கங்களுடன் வெளியிடப்பட்டுள்ளன.
- நிகழ்வுகள் சூழ்நிலைகள், அனுபவங்கள் என்பவை மனதைத் தொடும் வகையிலும், உள்ளம் கவரும் விதத்திலும் வெளியிட உதவுகின்ற மொழி (அமைப்பு, சிறப்பு வாக்கியங்கள், நடை இவற்றின் பயன்பாடு) பயன்படுத்தப்பட்டுள்ளது.
- காரணகாரியக்கூறும், நம்பகத்தன்மையுடையனவாகவும், முறையாகவும் விளக்கப்பட்டுள்ளது.

## மதிப்பீட்டு மண்டலங்கள்

மொழி வெளியீட்டு வடிவங்களின் அடிப்படையிலேயே மாணவனை மதிப்பிட வேண்டும். இவற்றின் அடிப்படையில் அதற்கு உதவும் வகையிலான மதிப்பீட்டுக் குறிப்புகளை உருவாக்கி மாணவனுக்கு வழிகாட்ட வேண்டும். ஆனாலும் பெற்றோருக்கும், அமைப்புகளுக்கும் தேவையான விவரங்கள் அளிப்பதற்கும், குறிப்பிடுவதற்கும் ஏற்றவாறு மொழி வெளியீட்டு வடிவங்களைக் குழுவாக்கி மண்டலங்களைப் பகுப்பது வசதியாக இருக்கும். பயன்பாட்டின் வசதி மட்டுமே இப்பகுப்பிற்கு அடிப்படையாக அமைய வேண்டும்.

இங்கு மொழி வெளியீட்டு வடிவங்களை அவற்றின் சமூகமயமான கருத்துப்பரிமாற்ற முறையிலான கடமை / நோக்கம் இவற்றைக் கருத்தில் கொண்டு மண்டலங்களைப் பகுக்கும் முறை அறிவுறுத்தப்பட்டுள்ளது. தொடர் மதிப்பீடு, பருவ மதிப்பீடு, இவற்றின் தரத்தைக் குறித்து வைப்பதற்கு இம்மண்டலங்களை அடிப்படையாகக் கொண்டால் போதுமானது.




1. **விவர விளக்கமளித்தல்**
    - விளக்கம்
    - குறிப்பு
    - செய்தி
    - கட்டுரை (சிறப்புக்கட்டுரை)
    - விளக்கக்கட்டுரை
2. **அனுபவ விளக்கம்**
    - அனுபவக் குறிப்பு
    - நினைவுக் குறிப்பு
    - வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு
    - அனுபவ விளக்கம்
    - நாட்குறிப்பு
    - தன் வரலாறு
3. **விமர்சனமும் திறனாய்வும்**
    - விமர்சனக்குறிப்பு
    - பகுப்பாய்வு
    - நூல் திறனாய்வு
    - கதாபாத்திர திறனாய்வு
4. **கண்ணோட்டத்திற்கு ஏற்ப விளக்கமளித்தல்**
    - ஆய்வுக்குறிப்பு
    - ரசனைக் குறிப்பு
    - கருத்து வெளியீட்டு குறிப்பு
    - அபிப்பிராயக் குறிப்பு
    - கலந்துரையாடல் குறிப்பு
    - வாசித்தல் குறிப்பு
    - விளக்கக்குறிப்பு

- ஒப்பீட்டுக் குறிப்பு
- நேர்காணல் வினாநிரல்

5. **விளம்பரம்**
   - அழைப்பிதழ்
   - சுவரொட்டி
   - முத்திரை வாக்கியம்

6. நாடகம்
7. கேலிச்சித்திரம்
8. கதை
9. கவிதை
10. வருணனை
11. கடிதம்

**பருவ மதிப்பீட்டுச் செயல்பாடுகள்**

பருவ மதிப்பீடு செய்து மாணவனின் நிலை பற்றித் துல்லியமாக மதிப்பிட சில வரையறைகள் உண்டென்பதைக் கூறினோமல்லவா? இந்த வரையறைகளை எதிர்கொள்ளும் வகையில் பருவ மதிப்பீட்டிற்குப் பயன்படுத்தும் கருவிகளும் செயல்பாடுகளும் அமைதல் வேண்டும். இவற்றிற்கு என்னென்ன தனித்தன்மைகள் இருக்க வேண்டும்?.

- ஒரு பிரச்சினைச் சூழல் உருவாக்க வேண்டும்.
- உயர் சிந்தனையைத் தூண்டுவதாக அமைய வேண்டும்.
- மொழித் திறன்களின் வளர்ச்சியை மதிப்பிட இயல வேண்டும்.
- பெற்ற அறிவினைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பை உருவாக்க வேண்டும்.
- மாணவர்களின் அனுபவங்களோடு தொடர்புடையதாக இருக்க வேண்டும்.
- சமூகப் பிரச்சினைகளில் தனது கருத்துகளைக் கூறுவதற்கான வாய்ப்பினை உருவாக்க வேண்டும்.
- மதிப்பீட்டுக் குறிப்புகளின் அடிப்படையில் மதிப்பிட இயலுவதாக இருக்க வேண்டும்.
- மாணவர்களின் அறிவு நிலையுடன் இணைந்து செல்வதாக அமைதல் வேண்டும்.
- விளக்கங்களும் அறிவுரைகளும் எளிமையாக இருத்தல் வேண்டும். சில செயல்பாட்டு மாதிரிகளைப் பாருங்கள். மொழி வெளியீட்டு வடிவத்தின் பொது மதிப்பீட்டுக் குறிப்புகள் செயல்பாட்டிற்கு ஏற்ப விளக்கியும் சிறப்படையச் செய்தும் வினாக்களுடன் கொடுக்கப்பட்டுள்ளன.

### 1. கவிதை உருவாக்குவோம்

நெல் வயல்கள் யாவும் வாழைப் பயிரிடவும் வீடுகள், சாலைகளுக்குமாக மாறிவிட்டன. அறிவியல் பூர்வமல்லாத செயல்பாடுகளால் குளங்களும், நீரோடைகளும் வற்றி வரண்டு விட்டன. வேளாண் தொழில் செய்வோரின் வாழ்க்கை துன்பத்திற்குள்ளாகியுள்ளது. இவற்றோடு எதிர்வினையாற்றி நமது சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்டுள்ள அழிவைப் பற்றி ஒரு பாடல் உருவாக்கலாம்.

- சுற்றுச்சூழலின் அழிவு, பயிர்களின் அழிவு இவற்றோடு தொடர்புடைய முக்கிய கருத்துகள் உட்படுத்தப்பட்டுள்ளன.
- சுற்றுச்சூழல் அழிந்து வரும் நிலையை விளக்கும் படம் மனதில் பிரதிபலிக்கும் வண்ணம் மொழி கையாளப்பட்டுள்ளது.(உருவக் கற்பனை, சொல் வருணனை வாக்கியங்கள்)
- யாப்பு, பாத்திரப்படைப்பு இவை கற்பனைத்திறனுடனும் கவரும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளன.
- கவிதையைப் பலமுறை வாசிப்பதற்குத் தூண்டும் வகையிலான வருணனை வடிவம், அணி, ஓசை, எதுகை மோனை போன்றவை அமைந்துள்ளன.



### 2. அழைப்பிதழ் தயாரிப்போம்

பள்ளியில் பல்வேறு நிகழ்ச்சிகளுடன் ஓணவிழா நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கலைநிகழ்ச்சிகள் மட்டுமின்றி ஓண வரலாற்றைப் பற்றிய கருத்தரங்கம் நடத்த வேண்டுமென்றும் பள்ளிச்சட்டசபையில் தீர்மானிக்கப்பட்டது. விழாவைத் தொடங்கி வைப்பவர் உள்ளாட்சித் துறைத் தலைவராவார். விழாவின் வெற்றியை உறுதி செய்வதற்குப் பெற்றோர், பொதுமக்கள் ஆகியோரை அழைக்க வேண்டும். மேற்கூறிய நிகழ்ச்சிகள் அனைத்தும் அடங்கிய ஒரு அழைப்பிதழ் தயாரிக்க.

- ஓண விழா நடத்துவதற்குத் தேவையான எல்லாச் செய்திகளும் அழைப்பிதழில் அடக்கப்பட்டுள்ளன.
- ஓண விழாவைப் பற்றிய விவரங்கள் சரியாகவும், ஆழமாகவும் வாசிப்போரின் மனதில் பதியும் வகையிலும் மொழி (சிறு வாக்கியங்கள், சிறப்பு வாக்கியங்கள், நடை ஆகியவை) பயன்படுத்தப்பட்டுள்ளது.

- அழைப்பிதழின் அமைப்பு (தலைப்பு, கூறும் முறை, உள்ளடக்கச் செய்திகள் அழைப்பவரின் பெயர், ........ நேரம் தேதி.........) கடைபிடிக்கப்பட்டுள்ளது.
- அழைப்பிதழ் ஆர்வத்துடனும் எளிதில் வாசிக்கத் தூண்டும் வகையிலும் சுருக்க மாகவும் எல்லோரையும் கவரும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளது.

### 3. *ரசனைக் குறிப்பு எழுதுவோம்*

(அ) கதவில் யாரோ தட்டுகிறார்கள்

கதவு திறந்தவுடன் முகவுரையில்லாமல் வந்தவர் அவரது மனக்கதவையும் திறந்தார்.

"நேற்று இரவு நீங்கள் பார்த்த கனவை விற்கிறீர்களா? நல்ல விலை தரலாம்"

ஒரு நிமிடம் உணர்ச்சியுடன் நின்றார்.

அதிகம் சிந்திக்கவில்லை.

பலமுறை விலைபேசி நான் எனது கனவுகளை விற்றேன். இனி தங்குவ தற்கு அரண்மனை, பறந்து செல்ல கார், ஆனால் இரவுகள் என்னை பயமு றுத்துகின்றன. கனவுகளில்லாத இரவுகள் எனக்கு எதிராக வாய் திறந்தது.

**(பி.கெ. பாறக்கடவு, கினாவுகள்)**

- பண ஆசையினால் ஆளுமையையும் பரம்பரைப் பண்பாட்டை விற்றழித்து விபத்துகளைப் பெற்றுக்கொள்ளும் மனிதர்களைப் பற்றி கதாசிரியர் வெளிப் படுத்திய கருத்துகளை உட்கொண்டு வெளியிட்டுள்ளார்கள்.
- வாசகரின் மன உணர்வுகளை உணரச் செய்யும் வகையில் ஆர்வமும் ஆவே சமும் உருவாக்கும் கதை மாந்தர், அவர்களது செய்திகள், அவற்றின் வெளிப் பாட்டு முறை ஆகியவற்றை வெளிப்படுத்துவதற்குரிய வகையிலான மொழி (அமைப்பு, சிறந்த வாக்கியங்கள், நடை இவற்றின் பயன்பாடு) கையாளப்பட் டுள்ளது.
- எளிமையான சொற்களைப் பயன்படுத்தி வலிமையாகக் கூறும் முறை, 'மனக் கதவும் திறந்தது' போன்ற தொடர்களின் அழகும் ஆழமும், உலகமயமாத லின் காலத்தில் இவைபோன்ற கருத்துகளின் சிறப்பு இவற்றைக் கண்டுபிடித்து யுக்திபூர்வமாக வெளியிட்டுள்ளனர்.

## காலை

ஒளியைக் கண்டேன் கடல்மேல் - நல்
உணர்வைக் கண்டேன் நெஞ்சில்
நெளியக் கண்டேன் பொன்னின் - கதிர்
நிறையக் கண்டேன் உவகை

துளியைக் கண்டேன் முத்தாய் - களி
துள்ளக் கண்டேன் விழியில்
தெளியக் கண்டேன் வையம் - என்
செயலிற் கண்டேன் அறமே!

- பாரதிதாசன்

மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள தொடர்பு உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு போன்றது. பண்டைக்கால மனிதன் இயற்கையைத் தன் வாழ்வியலின் ஒரு கூறாகவே கருதி வந்தான்.இயற்கை மனிதனை வியக்க வைத்தது மட்டுமன்றி, அவனுக்குள்ளே ஒருவித மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியது. மனிதனின் சிந்தனைத்திறனின் வளர்ச்சிக்கும் இயற்கையே தூண்டுகோலாக அமைகிறது. இவ்வுண்மையை இக்கவிதையில் எளிமையாகவும் இனிமையாகவும் பாடியுள்ளார் கவிஞர்.

இயற்கை மனித உள்ளங்களில் ஏற்படுத்திய உணர்வுகளைத் தெள்ளத்தெளிவாகவும் இனிமையாகவும் எடுத்துச் சொல்வதற்கேற்ற மொழிநடையை (சொல் தேர்வு,சொல்லழகு, எதுகை, மோனை, ஓசைநயம்) கவிஞர் கையாண்டுள்ளார்.

தன்னுணர்வு,உற்றுநோக்கல்கள், கற்பனை இவை கலந்து கவிதை வெளியிடப் பட்டுள்ளது.

உவமைச் சிறப்போடும் ஓசைநயத்தோடும் கற்பனைத் திறனோடும் படைக்கப்பட்டுள்ள இக்கவிதை, இயற்கை குறித்த சமூக விழிப்புணர்வுக்கு ஓர் ஆதாரமாக அமைந்துள்ளது.

**5.பத்திரிகைச் செய்தி தயாரிப்போம்**

அந்நிகழ்ச்சியை விவரிக்கலாமா? சூரஜ் கூறினான், "நாங்கள் கய்ப்பஞ்சேரி பள்ளியில் ஆறாம் வகுப்பு மாணவர்கள், குழுவாக ஊட்டிக்குச் சுற்றுலா செல்லும் குழுவே எங்கள் குழு."

"எப்படி விபத்து நேரிட்டது?"

"பெரிய ஆழமான குழி. அதனைச் சுற்றிலும் பாறைகள்.... மழைநீருடன் சேறும் நிறைந்திருந்தது. எல்லாம் நிமிடங்களுக்குள் நிகழ்ந்தது".

"அக்குழியில் இதற்கு முன் விழுந்து இறந்தவர்கள் 58 என்று அதிகாரிகள் கூறுகின்றனர். இது வரையிலும் எவரும் மீண்டதில்லை. ஆழம் அளப்பதற்கு இயலாத அப்பெரிய குழியில் மூச்சுக்காற்று குறைந்து விடும், இறந்து போவோம் எனக் கருதிய அப்புவின் உயிரைக் கையிலேந்தி நான் வெளியே வந்தேன்."

பாராட்டு விழா.... எல்லோரும் சூரஜைப் புகழ்ந்தார்கள்.

"நட்பு, எடுத்துக்காட்டான தீரச்செயல், அபூர்வம் கல்வி அமைச்சர் கூறினார்."

சூரஜின் தீரச் செயல் மாணவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். இதனைச் சமூகத்திற்கு அறிவிக்கும் பொருட்டு ஒரு பத்திரிகைச் செய்தி தயாரிக்க.

- சுற்றுப்பயணத்தின் போது ஏற்பட்ட விபத்தும், தைரியத்துடன் சூரஜ் அப்புவைக் காப்பாற்றிய செய்திகளும் கூறப்பட்டுள்ளன.
- சூரஜின் தீரச்செயல் வாசகர்களின் மனதைத் தொடும் வண்ணமும் அவன்மேல் நல்லெண்ணத்தை உருவாக்க இயலுவதுடன் கவர்ச்சிகரமான மொழிநடையும், கையாளப்பட்டுள்ளது. (அமைப்பு வாக்கியங்கள், நடை இவற்றின் பயன்பாடு)

- சூரஜின் தீரச்செயலை, மனித நேயத்தை எடுத்துரைப்பதும், வாசிப்பதற்குத் தூண்டு கின்றதுமான கவர்ச்சியான தலைப்பும் கொடுக்கப்பட்டுள்ளது.
- சிறுவன் காட்டிய தீரச்செயல், மனிதநேயம் இவற்றிலிருந்து விபத்து, மீட்பு இவற் றின் விளக்கங்களும் கடைபிடிக்கப்பட்டுள்ளன.

6. **கட்டுரை**

புவியில் நீயும் இல்லையெனில்
புவனமாந்தர் வாழ்வது எப்படியோ?
உலகம் வாழக் கருவானாய்
உயர்ந்து நிற்கும் மலையானாய்.

சுற்றுச்சூழலின் அழிவை இக்கவிதை எடுத்துரைக்கின்றது. புதிய தலைமுறைக்குச் சுற் றுச்சூழலிலிருந்து பலவற்றையும் பெற இயலாத நிலை ஏற்படலாம். இவை போன்ற பிரச்சினைகள் கவிதையில் பிரதிபலிக்கின்றதா? இப்பொருளில் ஒரு கட்டுரை தயாரிக்க.



- கட்டுப்பாடற்ற முறையில் மண்ணை எடுத்தல், மரங்களை வெட்டுதல், இதனால் குன்றுகளுக்கு ஏற்படும் அழிவு. இவற்றிக்குக் காரணமான மனிதனின் பேராசைற் ஒருவர் உளநோயால் பாதிக்கப்படும்போது சமூகம் வகிக்கும் பங்கு போன்ற கருத் துகள் அடங்கியுள்ளன.
- கருத்துகளும், முடிவுகளும் வலிமையுடன் வாசகரைச் சென்றடையப் பொருத் தமான மொழிநடை (அமைப்பு, சிறப்பு வாக்கியங்கள் நடை ஆகியவற்றின் பயன் பாடு) கையாளப்பட்டுள்ளது.
- கட்டுரையின் அமைப்பு சரியாக உள்ளது. (முடிவுரை, முக்கிய கருத்துகள், விளக் கங்கள், முடிவுரை)
- சுற்றுச்சூழல் அழிவு பற்றிய மாணவனின் உற்றுநோக்கல் / முடிவுகள், சுய சிந்தனை யுடன் உதாரணங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

**7. ஒப்பீட்டுக் குறிப்பு**

செந்தமிழ் இன்பம் செறிந்திட நூல்கள்
சேர்ப்பதும் நூலகமே - தமிழ்
சந்தம் விளங்கிடச் சாத்திர நூல்கள்
தருவதும் நூலகமே...

இக்கவிதையை ஐந்தாம் வகுப்பு ஒன்றாவது அலகில் (அறிவின் வாசல்) இடம்பெறும் பாரதிதாசனின் புத்தகசாலை என்ற கவிதையுடன் ஒப்பிட்டுச் சொந்தக் கருத்துகளோடு ஒப்பிட்டுக் குறிப்பு தயாராக்குங்கள்.

பெற்றோர்களுடன் கருத்துப் பரிமாற்றம்